11 JUN 199

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்

---

*[1995. திசெம்பர் 29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1995. திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.40

தபாற் செலவு : ரூபா 3.15

(අශෝධිත පිටපත /பிழை திருத்தப்படாத

**1995 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டம்**

**[1995, திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

**ச. வ.—ஓ. 51/95.**

**1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.**

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அதன் எல்லா ஏற்பாடுகள் தொடர்பிலும் அல்லது அதன் எவையேனும் ஏற்பாடுகள் தொடர்பிலும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

2. ("முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் கள்.

3. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(i) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பௌத்தம் பற்றிய அறிவைப் பரப்புவதற்கும் தம் மனித செயற்பாடுகளை வளர்ப்பதற்கும், பௌத்த கோட்பாடு மற்றும் கட்டுப்பாடு நெறிமுறை ஆகியவற்றில் புலமை உள்ளோர்களுக்கு பயிற்சி அளித்தல்;

(ii) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பாளி, பௌத்த கலாசாரம் அத்துடன் பௌத்த தத்துவம் ஆகியனபற்றிய கற்கையை மேம்படுத்தலும் இக்கற்கைகளை நவீன உலகத்தில் உள்ள நிலைமைகளுக்கு ஒத்தவாறு அபிவிருத்தி செய்தலும்;

(iii) (அ) பிரிவேனாப் பாடசாலைகளிலும் அதே போன்ற நிறுவனங்களிலும் பௌத்தத்தையும் பாளியையும் கற்பிப்பதில் பிக்கு மாணவர்களுக்கும் ஆண்வர்க்கத்தைச் சேர்ந்த பாமர மாணவர்களுக்கும் பயிற்சியளித்தல்;

(ஆ) பிக்கு மாணவர்களினதும் ஆண்வர்க்கத்தைச் சேர்ந்த மற்றும் எல்லா பாமர மாணவர்களினதும் ஒழுக்கம் சார் நடத்தையையும் மன ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கும், முன்னேற்றுவதற்கும் வசதி செய்தல்; அத்துடன்

2—டீ 038027—1,595 (95/10)

(இ) மேலே கூறப்பட்டுள்ள எவையேனும் விடயங்களுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறு ஏதேனும் கருமத்துக்கும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பல்கலைக் கழகத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பல்கலைக் கழகத்துக்குப் பின்வரும் தத்துவங்கள் இருத்தல் வேண்டும் :—

(i) அங்கே வழங்கப்படவேண்டிய கற்கைகள் பற்றியும் அளிக்கப்படவேண்டிய பட்டங்கள், டிப்புளோமாக்கள் அத்துடன் வேறு உயர் கல்வித் திறமைகள் பற்றித் தீர்மானித்தல்;

(ii) காலத்துக்குக் காலம், ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படவேண்டிய பிக்கு மாணவர்களினதும் ஆண் பாமர மாணவர்களினதும் எண்ணிக்கையையும் அத்துடன் அங்கேயுள்ள வெவ்வேறு கற்கை நெறிகளுக்கு அவ்வெண்ணிக்கையினைக் குறித்தொதுக்குவது பற்றித் தீர்மானித்தல்;

(iii) அனுமதி வழங்கும் குழுவின் ஆலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்கு பிக்கு மாணவர்களையும் ஆண் பாமர மாணவர்களையும் உள்வாரி மாணவர்களாகத் தெரிவு செய்து அனுமதித்தல்; அனுமதி வழங்கும் குழுவில் உள்ளோர் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் பற்றி துணை விதிகளால் விதிக்கப்படுதல் வேண்டும்;

ஆயின், ஆண்டுதோறும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு பிக்கு மாணவர்களாக இருத்தல் வேண்டும்;

(iv) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட எக்கற்கைப் பிரிவிலும் போதனை பெறுவதற்கு வழிவகை செய்தல்;

(v) வெவ்வேறு கற்கைப் பிரிவுகளில் திறன் பெற்றிருக்கின்ற ஆட்களின் திறமையை உறுதிசெய்வதற்காக பரீட்சைகளை நடாத்துதல்;

(vi) பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளைப் பின்பற்றிய அத்துடன் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சித்தியடைந்த ஆட்களுக்கும் அவர்கள் மீதும் பட்டங்களை, டிப்புளோமாக்களை மற்றும் வேறு உயர்கல்வித் திறமைகளை வழங்குதல் அத்துடன் அளித்தல்;

(vii) இலங்கை மாணவர்களுக்கு அத்துடன் பல்கலைக்கழகத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டனவுமான இலங்கைக்கு வெளியேயுள்ள நிறுவனங்களின் மாணவர்களுக்கும் பட்டங்கள், டிப்புளோமாக்கள் அத்துடன் வேறு உயர்கல்வித் திறமைகள் வழங்குவதற்காக வெளிவாரிப் பரீட்சைகள் நடாத்துதல்;

(viii) பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சையிலே தேறிய ஆட்களுக்கும் தேறியஆட்கள் மீதும் பட்டங்களையும், டிப்புளோமாக்களையும் வேறு கல்விச் சிறப்புக்களையும் வழங்குதலும் சூட்டுதலும்;

(ix) பல்கலைக்கழகத்தின் செனேற் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தின் பேரவையினால் , அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்கு கௌரவப் பட்டங்களை அல்லது உயர் கல்வித் திறமைகளை அளித்தல்;

(x) பௌத்த மற்றும் பாளி மொழிக் கல்வியை மேலும் முன்னேற்றிச் செல்வதற்காக தகுதியுள்ள பட்டப் பின்படிப்பு ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஆராய்ச்சி புலமைப் பரிசில்களை நிறுவி அவற்றை வழங்கி அத்துடன் மானியங்கள் வழங்குதல்;

(xi) பேராசிரியர் பதவிகளையும், இணைப்பேராசிரியர் பதவிகளையும், பரீட்சகர் பதவிகளையும் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பதவிகளையும் ஏற்படுத்தல் ;

(xii) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பன வகையாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெற்று வைத்திருக்கலாம் என்பதுடன், பல்கலைக்கழக ஒழுங்குவிதிகளினால் விதிக்கப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள், மட்டுப்பாடுகள், தடைகள் என்பவற்றுக் கமைய அதை விற்கலாம், சாட்டுதல் செய்யலாம், கொடுத்து மாற்றலாம், அல்லது வேறு வகையில் கையாளலாம் ;

(xiii) இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ இப் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களோடு ஒத்த அல்லது பொருளளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் அத்துடன் புலமை பெற்றவர்கள் ஆகியோரைக் கொடுத்து மாற்றுவதன் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைத்தல் ;

(xiv) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக, நூலகங்களையும் வேறு கட்டிடங்களையும் நிறுவுதலும், வசதிகளையமைத்தலும், பேணுதலும்;

(xv) வதிவிட இல்லங்களைத் தாபித்து முகாமை செய்தல், வதிவிட வசதிகளை வழங்கும் வதிவிட மனைகளுக்கு உரிமம் வழங்குதல் அத்துடன் பல்கலைக்கழகத்தின் எல்லாப் பிக்கு மாணவர்களும், ஆண் பாமர மாணவர்களும், வசிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல்;

(xvi) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், அலுவலர்கள் வேறு ஊழியர்கள் ஆகியோரின் வதிவிடம், ஒழுக்காறு, நல்வாழ்வு என்பவற்றை ஒழுங்குபடுத்தலும் அவற்றிற்கு ஏற்பாடு செய்தலும் ;

(xvii) வங்கிகளிலிருந்து அத்துடன் வேறு மூகவர் நிலையங்களிலிருந்து கடன் எடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற ஒழுங்கு விதிகளுக்கு

இணங்க இந்நிறுவனங்களிலிருந்து கடன்கள் பெறுவதற்கு எல்லா பிக்கு மாணவர்களுக்கும் ஆண் பாமர மாணவர்களுக்கும் உதவி செய்தல்;

(xviii) காலத்திற்குக் காலம் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத் தகைய கட்டணங்களைக் கோருதலும், பெறுதலும் ;

(xix) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பயனுறப் பிரயோகிப்பதற்கும் மூன்றாம் பிரிவில் எடுத்துக்காட்டப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமானவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது "4 (உ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கையின் பிரசைகளாகவுள்ள ஆட்களும் இலங்கையில் சட்டமுறையாக உள்ள வேறு ஆட்களும் அவர்கள் ஆணாயிருப்பினும் சரி பெண்ணாயிருப்பினும் சரி." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "4 ஆம் பிரிவின் (vii), (viii) ஆம் பந்திகளின் ஏற்பாடு ஆண்பால் ஆட்களைச் சேர்ந்த எல்லோருக்கும் பல்கலைக்கழகம் திறந்த தகவுடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5(அ) என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பிரிவானது புகுத்தப்படுமென்பதுடன் இப்பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 5(அ) என்னும் பிரிவாக பயனுடையதாதலும் வேண்டும் :—

"மாணவிகளின் உரிமைகள்.

5அ. பெண்பாலைச் சேர்ந்த ஆட்கள், அதற்கென ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய, பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களாக பட்டதாரிப் படிப்பைப் பூர்த்தி செய்வதற்கும் பல்கலைக்கழகத்தின் பட்டங்கள் எவையும், டிப்ளோமாக்கள் எவையும் அல்லது வேறு உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவர்களாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை நீக்குதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது (i) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இ) ஸ்ரீ லங்கா அமரபுர மகாசங்க சபாவின் தலைவராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற மகாநாயக்க தேரோ அல்லது உத்தரீத்தர மஹாநாயக்க தேரோ; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (i) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(i) வணக்கத்துக்குரிய துணைவேந்தர் ;".

(2) அப்பிரிவின் (i) ஆம் பந்தியை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்; இது அப்பந்தியின் (ii) ஆம் பந்தியாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"(ii) ஒவ்வொரு பீடத்தின் தலைவர்; " அத்துடன்

(3) அப்பிரிவின் (ii), (iii), (iv) அத்துடன் (v) என்னும் பந்திகளை முறையே அப்பிரிவின் (iii), (iv), (v) அத்துடன் (vi) என்னும் பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) (அ) பல்கலைக்கழகத்தின் முதலாவது வணக்கத்துக்குரிய துணைவேந்தர் சனாதிபதியால் நியமிக்கப்படும் பிக்கு ஒருவராக இருத்தல் வேண்டும். அடுத்துவரும் வணக்கத்துக்குரிய துணைவேந்தர் ஒவ்வொருவரும் (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரின் விதப்புரையின் மேல், பல்கலைக்கழகப் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று பிக்குகளைக் கொண்ட ஒரு குழாத்திலிருந்து சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் வணக்கத்துக்குரிய துணைவேந்தராக ஆள் எவரும் இரண்டு அடுத்தடுத்த பதவிக்காலங்களுக்கு மேல் நியமிக்கப்படுதலாகாது;

(இ) பல்கலைக்கழகத்தின் மதிப்புக்குரிய துணைவேந்தர் அமைச்சருடனான ஆலோசனையின் பின்னர் சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்; அத்துடன்

(ஈ) தமது பதவிக் காலம் முடிவுற்றதன் காரணமாக அல்லது தாம் பதவியிலிருந்து விலகியதால் பதவியை வறிதாக்குகின்றாரோ, அந்த வணக்கத்துக்குரிய துணைவேந்தர் எவரும் வணக்கத்துக்குரிய துணைவேந்தர் பதவிக்கு அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் வகித்த நிலையான பதவிக்குத் திரும்பப் போவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2), (3), (4), (5), (6), (7) அத்துடன் (8) ஆகிய உட்பிரிவுகளில் "துணைவேந்தர்" என்னும் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம், "வணக்கத்துக்குரிய துணைவேந்தர்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும், அத்துடன்

(3) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(9) வணக்கத்துக்குரிய துணைவேந்தர் பதவியில் வெற்றிடம் எதுவும் ஏற்பட்டால், (1) (அ) என்னும் உட்பிரிவின் கீழ் நிரந்தர நியமனம் ஒன்று செய்யப்படும்வரை, செயலாளர் அப்பதவியின் கடமைகளைப் புரிவதற்காகப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கைச் செய்தல் வேண்டும்.

(10) இச்சட்டத்தில் எது எப்படி இருப்பினும், இப்பிரிவு நடைமுறைக்குவரும் திகதிக்கு முற்போந்த நாள் பதவி வகித்துக் கொண்டிருந்த வணக்கத்துக்குரிய துணைவேந்தர் அத்தகைய திகதியன்று பதவி வகிக்காதொழிதல் வேண்டும்,

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு பதவி வகிக்காதொழிகின்ற வணக்கத்துக்குரிய துணைவேந்தர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அடுத்துவரும் பதிவாளர் ஒவ்வொருவரும் போவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "அடுத்துவரும் பதிவாளர் ஒவ்வொருவரும், விதிகளினால் விதிக்கப்பட வேண்டிய கட்டமைவுகொண்ட தெரிவுக்குழு ஒன்றின் விதப்புரையின் மேல் போவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அடுத்துவரும் நிதிப் பொறுப்பாளர் ஒவ்வொரு போவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அடுத்துவரும் நிதிப் பொறுப்பாளர் ஒவ்வொருவரும், கட்டமைவு விதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டிய தெரிவுக்குழு ஒன்றின் விதப்புரையின் பேரில் போவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அடுத்துவரும் நிதியாளர் ஒவ்வொருவரும் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அடுத்து வரும் நிதியாளர் ஒவ்வொருவரும். கூட்டமைவு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடிய தெரிவுக்குழு ஒன்றின் விதப்புரையின்மேல் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 14 ஆம் பிரிவை நீக்குதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 15ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பல்கலைக் கழகத்தின் அதிகார சபைகள்.

15. பல்கலைக் கழகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும்;

(i) பேரவை;

(ii) செனேற் சபை;

(iii) பீடச் சபை அல்லது பீடச்சபைகள்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(i) (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பல்கலைக் கழகத்தின் பேரவையானது பல்கலைக் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாகவும் ஆளும் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் (vi) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் ஆட்களைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும் :—

(i) வணக்கத்துக்குரிய துணைவேந்தர் ;

(ii) ஒவ்வொரு பீடத்தின் தலைவர் ;

(iii) செனேற் சபையினால் அதன் உறுப்பினர்களிடையே இருந்து தெரிவு செய்யப்படும் இரு உறுப்பினர்கள் ;

(iv) பௌத்த சாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(v) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின், அமைச்சின் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ; அத்துடன்

(vi) பந்திகள் (i), (ii), (iii), (iv)அத்துடன் (v)இன் கீழ்நிய மிக்கப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமனான உறுப்பினர்களின் எண்ணிக்கை, ஒன்றினால் அதிகரிக்கப்பட்டு அத்தகைய எண்ணிக்கையுடைய (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்கள் எல்லோரும் கல்வி, நிதி, சட்டம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் மேன்மைவாய்ந்த சேவை புரிந்துள்ள ஆட்களிடையே இருந்து அமைச்சரினால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ;

(vii) பேரவையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்திற்குக் குறையாதவர்கள் பிக்குகளாக இருத்தல் வேண்டும் ;"

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "துணைவேந்தர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வணக்கத்துக்குரிய துணை வேந்தர்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்."

(3) அப்பிரிவின் (3) அத்துடன் (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

(3) நாலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, விடயத்துக்கேற்றவாறு அவரின் நியமனத் திகதியிலிருந்து அல்லது அவர் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்றாண்டு காலமொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள் நியமனத்திற்கு அல்லது மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் தமது பதவிக் காலம் முடிவுறுமுன்னர் பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்து வருபவர், தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, தமக்கு முற்போந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) (அ) பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரெவரும் விடயத்துக்கேற்றவாறு அல்லது பல்கலைக்கழகத்தின் வணக்கத்துக்குரிய துணை வேந்தருக்கு முகவரியிடப்பட்ட [illegible] எழுதிய எழுத்துமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்;

(ஆ) இச்சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் திகதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கும் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், இப்பிரிவு நடைமுறைக்கு வந்த திகதிக்குமேல் அத்தகைய உறுப்பினர்களாக பதவி வகிக்காதொழிதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு பதவிவகிக்காதொழி கின்ற நியமன உறுப்பினர் எவரும் மீள் நியமனத்துக்கு தகவுடையராதல் வேண்டும்."; அத்துடன்

(5) அப்பிரிவின் (5) அத்துடன் (6) ஆகிய உட்பிரிவுகளில் "சனாதிபதி" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "அமைச்சர்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு அதன் (3) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (vi) அத்துடன் (vii) என்னும் பந்திகளை நீக்கி விட்டு, அவற்றுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(vi) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும், ஆண்டுக் கணக்குகளையும் பரிசீலித்து அவசியமானால் அவற்றைத் திருத்தி நிறைவேற்றுதலும் அத்தகைய அறிக்கைகளையும் கணக்குகளையும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் ;

(vii) பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளை வழங்கும் நோக்கத்துக்காக துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய இலங்கைக்கு வெளியே உள்ள நிறுவனங்களை ஏற்றங்கீகரித்துப் பதிவு செய்தல் ;".

(2) அவ்வுட்பிரிவின் (ix) அத்துடன் (x) என்னும் பந்திகளை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ix) (அ) மற்றைய தேசிய பல்கலைக் கழகங்களின் ஆட்சேர்ப்புச் செயல் திட்டங்களுக்கு நியமனம் செய்வதற்கான நடவடிக்கை முறைகளுக்கும் இணங்க பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புச் செயல்திட்டங்களையும், நியமனத்துக்கான நடவடிக்கை முறைகளையும் முறைப்படுத்துதல் அத்துடன்

காலத்துக்குக்காலம் பணியாட்டொகுதியினரின் பல்வேறு தரங்களையும் அத்தகைய ஒவ்வொரு தரத்திலும் இருக்க வேண்டிய எண்ணிக்கையையும் நிர்மாணித்தல்; அத்துடன்

(ஆ) மற்றைய தேசிய பல்கலைக்கழகங்களில் எல்லாம் உள் ளிட்ட வேதனம், சம்பளம் பற்றிய கொள்கைகளுக்குள், பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த பணியாட்டொகுதியினருக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தினளவு மற்றும் பணியாட்டொகுதியினர் பெற வேண்டிய வேறு நன்மைகளின் தன்மை அத்துடன் அளவு பற்றிக் காலத்துக்குக் காலம் நிர்மாணித்தல்.

(x) எக்கருமங்கள் தொடர்பில் துணை விதிகள், விதிகள் அத் துடன் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகார மளிக்கப்பட்டிருக்கிறதோ அக்கருமங்கள் தொடர்பில் துணை விதிகள், விதிகள் அத்துடன் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை ஆக்குதல்.".

(3) அவ்வுட்பிரிவின் (xii) மற்றும் (xiii) ஆம் பந்திகளுக்குப் பதி லாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(xii) செனேற் சபையின் விதப்புரையை பரிசீலித்த பின்னர் பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியிலிருந்தோ அல்லது வேறுவகையிலோ பரீட்சையாளர்களை நியமித்தல் அத் துடன் அத்தகைய பரீட்சையாளர்களுக்குச் செலுத்தப் படக்கூடிய கட்டணம் எவற்றையும் நிர்மானித்தல்;

(xiii) பல்கலைக்கழக ஊழியத்தில் ஆட்களை நியமித்தல் அத் துடன் பல்கலைக்கழகத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்தல், நீக்குதல் அல்லது வேறுவகையில் தண்டித்தல்;

ஆயின், அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் விட யத்தில் தவிர, இத் தத்துவங்கள் வணக்கத்துக்குரிய துணைவேந்தருக்கு வழங்கப்படலாம்."; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (xv) மற்றும் (xvi) என்னும் பந்திகளை நீக்கி விட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடு வதன் மூலமும் :—

"(xv) பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் பொதுநலனை மேம் படுத்துவதற்காக நலன்புரிச்சபையொன்றை நியமித்தல். இச்சபையில் மாணவர்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப் படுதல் வேண்டும். அத்தகைய சபையின் கட்டமைவு, தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியன துணைவிதிகளால் விதித்துரைக்கப்படல் வேண்டும்; அத் துடன்

(xvi) பல்கலைக்கழகத்தின் மற்றெல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல். இப்பிரயோகத்திற்காக இச்சட்டத்தில் வேறு ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை :

ஆயின், ஏதேனும் உயர்கல்வி விடயம்தொடர்பில், செனேற் சபைக்கு அதுபற்றித் தமது அபிப்பிராயத்தை எடுத்து அதை பேரவைக்குத் தெரிவிப்பதற்கு முதலில் சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய பேரவையினால் தீர்மானமெதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

இப்பிரிவில் "உயர் கல்வி விடயம்" என்பது செனேற் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைவான ஏதேனும் விடயம் எனப் பொருள்படும்."

18அ, 18ஆ, 18இ 18ஈ மற்றும் 18உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

17. பின்வரும் புதிய பிரிவுகள் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ, 18ஆ, 18இ, 18ஈ மற்றும் 18உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"செனேற்சபை.

18அ. (1) பல்கலைக்கழகத்துக்கு செனேற்சபை ஒன்று இருத்தல் வேண்டும். இதுவே பல்கலைக்கழகத்தின் உயர்கல்வி சார் அதிகாரசபையாக இருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் செனேற்சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) வணக்கத்துக்குரிய துணைவேந்தர்;

(ஆ) ஒவ்வொரு பீடத்தினதும் தலைவர்;

(இ) ஒவ்வொரு கற்கைத் துறையினதும் தலைவர்;

(ஈ) நூலகப் பொறுப்பாளர்;

(உ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு நிரந்தரமான பேராசிரியர்;

(ஊ) மூற்போந்த பந்திகளில் குறிப்பிடுசெய்யப்படாதவர்களும் ஒவ்வொரு பீடத்தின் நிரந்தர ஆசிரியர்களால் அவர்களுக்குள் இருந்து தெரிவுசெய்யப்படுபவர்களுமான வேறு இரு ஆசிரியர்கள்; அத்துடன்

(எ) இலங்கையின் மற்றைய பல்கலைக்கழகங்களின் பௌத்த கற்கைகள் மற்றும் கலாசாரக் கற்கைகள் துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள் அத்துடன் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோருக்குள் இருந்து பேரவையினால் நியமிக்கப்படும் ஐந்து ஆசிரியர்கள்.

(3) தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், விடயத்துக்கேற்றவாறு அவர் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதி ஒன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ஓய்வு பெறுகின்றவிடத்து, அல்லது பதவியிலிருந்து விலகுகின்றவிடத்து அல்லது செனேற்சபையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராமையினால் பதவியை வேறுவகையில் வறிதாக்குகின்றவிடத்து, (2)ஆம் உட்பிரிவில் (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவருடைய இடத்தில் இன்னோர் உறுப்பினர் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் அல்லது நியமிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய வேறு உறுப்பினர், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய தமது முற்போந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக் காலத்துக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(4) செனேற்சபையின் உறுப்பாண்மையில் நாலில் ஒரு பங்கே அதன் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண்ணாதல் வேண்டும்.

(5) செனேற்சபை, பல்கலைக்கழகத்தில் போதனை, கல்வி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள்மீது கட்டுப்பாடும் பொதுப் பணிப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவும் (5) ஆம் உட்பிரிவினால் செனேற்சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கு பங்கமின்றியும், செனேற்சபையானது, பின்வரும் தத்துவங்களைக் கடமைகளை அத்துடன் பணிகளை, பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும் அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும் :—

(அ) சம்பந்தப்பட்ட பீடத்தில் அல்லது பீடங்களில் இருந்து கிடைத்த அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர் கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை பேரவையின் ஒருப்பாட்டுடன் வரைவு செய்தல்;

(ஆ) சம்பந்தப்பட்ட பீடத்திலிருந்து அல்லது பீடங்களிலிருந்து கிடைக்கும் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தபின்னர் பரீட்சையாளர்களாக நியமிக்கப்படுவதற்குத் தோதான ஆட்களின் பெயர்களைப் பேரவைக்கு விதப்புரை செய்தல்;

(இ) பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் விரிவுரையாளர்கள் ஆகிய பதவிகளையும் அத்துடன் வேறு உயர் கல்விப் பதவிகளையும் நிறுவுதல், இல்லாதொழித்தல் அல்லது இடைநிறுத்தம் செய்தல்பற்றிப் பேரவைக்கு விதப்புரை செய்தல்;

(ஈ) சம்பந்தப்பட்ட பீடம் அல்லது பீடங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளைப் பரிசிலனை செய்தபின்னர் பின்வருவனவற்றிப் பேரவை விதப்புரை செய்தல் :—

(அ) ஏலவேயுள்ள பீடங்களையும் கற்கைத் துறைகளையும் மீள் ஒழுங்கமைப்புச் செய்வதற்கான செயல்கதிட்டங்களையும் புதிய கற்கைப்பீடங்களையும் துறைகளையும் ஒழுங்கமைத்தலும்; அத்துடன்

(ஆ) அவ்வப்பீடங்களுக்கு கற்கைக்கான பாடங்களை குறித்தொதுக்குதல்; அத்துடன்

(உ) அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான, அத்துடன் குறிப்பாக, ஆனால் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, நிலையியற் குழுக்களின் அல்லது அந்நோக்கத்துக்கான குழுக்களின் அல்லது செனேற்சபையின், சபைகளின் அத்தகைய எண்ணிக்கையை நியமித்தலும் :—

(i) ஒரு நூலகக் குழு;

(ii) ஒரு ஆராய்ச்சிக் குழு;

(iii) ஒரு பாடத்திட்ட மற்றும் மதிப்பீட்டுக் குழு; அத்துடன்

(iv) ஒரு தகுதிகாண் கற்கை விடுமுறைக் குழு,

அத்துடன் அவர்களின் அலுவல் நியதிகளைக் குறித்துரைத்தல்; அவர்களுடைய அறிக்கைகளைப் பரிசிலனை செய்தல் அத்துடன் அத்தகைய அறிக்கைகளை திரிபுகளுடனோ அல்லது திரிபுகளின்றியோ அங்கீகரித்தல் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தல்.

பீடச்சபைகள்.

18ஆ. (1) பல்கலைக்கழகமொன்றின் ஒவ்வொரு பீடமும் பீடச்சபை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இப்பீடச் சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அப்பீடத்தின் தலைவர் ;

(ஆ) பீடத்தில் அடங்குகின்ற கற்கைத் துறைகளின் எல்லா நிரந்தர பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அத்துடன் விரிவுரையாளர்கள் ;

(இ) பீடத்தின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களினால் அவர்களுக்குள்ளிருந்து தெரிவு செய்யப்படும் இரு உறுப்பினர்கள் ;

(ஈ) பந்திகள் (ஆ) அத்துடன் (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்டோரும் அவர்களுக்குள்ளிருந்து தெரிவு செய்யப்பட்டோருமான உறுப்பினர்கள் புறநீங்கலாக, பீடத்தில் போதனை வழங்கும் நிரந்தரப் பணியாட்டொகுதியிலிருந்து இரு உறுப்பினர்கள்;

(உ) பீடத்தின் மாணவர்களினால் அவர்களுக்குள்ளிருந்து தெரிவு செய்யப்படும் இரு மாணவர்கள் ; அத்துடன்

(ஊ) பல்கலைக்கழகப் பணியாட்டொகுதி உறுப்பினர்களாக இல்லாதவர்களும் பீடத்துக்கு இயைபான கற்கைத்துறைகளில் பிரபல்யம் பெற்ற ஆட்களுள் இருந்து பீடச்சபையினால் தெரிவு செய்யப்படுபவர்களுமான மூன்று ஆட்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவர் ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் அத்துடன் வேறு எவரேனும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர், அவர் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுக் காலப் பகுதி ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும். அத்தகைய எல்லா உறுப்பினர்களும் மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவர்களாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பீடச்சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும் அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும் :—

(அ) செனேற் சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விடயத்தைப் பரிசீலித்து அதன்மீது அறிக்கை செய்தல் ;

(ஆ) செனேற் சபையின் கட்டுப்பாட்டுக்கு அமைய, பீடத்தின் கற்கைத் துறைகளில் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமான விடயங்களை ஒழுங்குபடுத்தல்

(இ) ஏதேனும் விசேட விடயத்தை அல்லது எவை பேனும் விசேட விடயங்களை பரிசீலித்து, அதன்மீது அல்லது அவைமீது அறிக்கை செய்யும் நோக்கத்துக்காக, பீடத்தின் உறுப் பினர்கள் தவிர்ந்த வேறு ஆட்களை உள்ள டக்கக்கூடிய குழுக்களை நியமித்தல்;

(ஈ) பீடத்தில் கற்கை நெறிகள் மற்றும் பரீட்சை கள் தொடர்பான எல்லா விடயங்கள் மீதும் செனேற் சபைக்கு விதப்புரைகளும் அறிக் கைகளும் வழங்குதல்; அத்துடன்

(உ) பரீட்சையாளர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்கள் பற்றி செனேற் சபைக்கு விதப்புரை செய்தல்.

(4) (அ) பீடச் சபையின் எல்லாக் கூட்டங்களுக் கும் பீடத் தலைவரே தலைமை வகித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இச்சட்டத்தின் 1இ என்னும் பந்தியின் கீழ் பீடத் தலைவரின் தேர்தல் தொடர்பாக நடாத்தப்படும் பீடச்சபையின் ஏதேனும் கூட்டத்து நடவடிக்கைகளிலிருந்தும் பரிசீலனைகளி லிருந்தும் சம்பந்தப்பட்ட விடயங்களிலிருந்தும் புறநீக் கம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டம் எதுவும் அத்தகைய புறநீக்கம் எப்படி இருப் பினும், முறையாக நடாத்தப்பட்டதாகக் கருதப்படு தலும் வேண்டும்.

பீடத்தலைவர் கள்.

18இ. (1) ஒவ்வொரு பீடத்துக்கும் தலைவரொரு வர் இருத்தல் வேண்டும். இவர் பல்கலைக்கழகத்தின் முழு நேர அலுவலர் ஒருவராகவும் அப்பீடத்தின் உயர் கல்விசார் மற்றும் நிருவாகம் சார் தலைவராகவும் இருத்தல் வேண்டும். பீடத்தலைவரானவர், அத்தகைய பீடம் உள்ளடக்குகின்ற கற்கைத்துறைகளின் தலைவர் களிலிருந்து பீடச்சபையினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அவர் தெரிவு செய் யப்பட்டதும், சம்பந்தப்பட்ட கற்கைத்துறை தலை வராக அவர் இல்லாதொழிதலும் வேண்டும்.

(2) பீடத் தலைவர், பொருத்தமான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அக்கற்றப்பட்டாலொழிய, மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(3) பீடத்தின் தலைவர் ஒருவர் லீவு எடுத்ததன் காரணமாக சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக மூன்று மாத காலத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு தமது பதவியின் கடமைகளை புரிய முடியாது இருக்கின்றவிடத்து, வணக்கத்திற்குரிய துணைவேந்தரானவர், அத்தகைய காலப்பகுதிக்கு, பீடத்தலைவர் என்ற பதவியில் செயலாற்றுவதற்கு அப்பீடத்தின் துறையின் இன்னோர் தலைவரை நியமித்தல் வேண்டும்.

பீடமொன்றின் தலைவர் ஒருவர் ஓய்வுபெறுகின்றவிடத்து அல்லது பதவியில் இருந்து விலகுகின்றவிடத்து அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகத் தமது பதவியின் அலுவலகக் கடமைகளை மூன்று மாதத்தை விஞ்சிய காலப்பகுதியொன்றுக்குப் புரிய முடியாமல் இருக்கின்றவிடத்து அப்பீடத்தின் தலைவர் பதவியானது வெற்றிடமாதலாதல் வேண்டும் என்பது ஒரு புதிய பீடத்தலைவர், (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தெரிவு செய்யப்படுதலும் வேண்டும்.

துறைத் தலைவர்கள்.

18ஈ. (1) கற்கை நெறியொன்றின் துறைத்தலைவர், வணக்கத்துக்குரிய துணைவேந்தரின் சிபாரிசின் மேல் பேரவையினால் நியமிக்கப்படும் பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளராக இருத்தல் வேண்டும் :

ஆயின், பேரவையினால் கற்கைத் துறையின் தலைவர், நியமிக்கப்படாதிருக்கின்றவிடத்து, வணக்கத்துக்குரிய துணைவேந்தரானவர், பேராசிரியர், இணைப்பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர் ஆகியோரை அவரது நியமனத் திகதியிலிருந்து ஒருமாத காலப் பகுதியொன்றை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு துறைத்தலைவர் பதவியில் செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

(2) துறைத்தலைவர், தோதான சாதனம் எதனதும் ஏற்பாடுகளுக்கு அமைய, அவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டு காலப்பகுதி யொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) வாராமை காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் துறை தலைவரொருவர் மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கு தமது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதிருக்கின்றவிடத்து, துணைவேந்தரானவர் அத்திணைக்களத்தின் அத்தகைய காலப்பகுதிக்கு செயலாற்றுவதற்குத் துறையின் தலைவராகச் செயற்படுவதற்கு இன்னொரு பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். ஆயின், துறையொன்றின் தலைவர் ஓய்வு பெறுகின்றவிடத்து அல்லது பதவியில் இருந்து விலகுகின்றவிடத்து அல்லது வேறு காரணங்களுக்காகத் தமது பதவியின் அலுவலகக் கடமைகளை மூன்று மாதத்தை விஞ்சிய காலப் பகுதியொன்றுக்குப் புரியமுடியாமலிருக்கின்றவிடத்து, அத்துறையின் தலைவரின் பதவியானது வெற்றிடமாதல் வேண்டும் என்பதுடன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒரு புதிய துறைத்தலைவர் தெரிவு செய்யப்படுதலும் வேண்டும்.

*பீடங்களையும் துறைகளையும் தாபித்தல்.*

18உ. பேரவையானது, பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அதன் போதனா, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான பீடம் அல்லது கற்கைத்துறை எதனையும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக் காலம் தாபிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.*

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் "ஒழுங்குவிதி" என்னும் சொல் எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "விதி" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ii) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ii) "ஆசிரியர் பதவிகளுக்கான அல்லது விதிகளினால் விதித்துரைப்படக் கூடியவாறான வேறு பதவிகளுக்கான நியமனம்."

21, 22 அத்துடன் 23ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21, 22 மற்றும் 23ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவுகள் இடப்படுகின்றன :—

"ஆசிரியர்களின் தகுதிகாண் காலப் பகுதி.

21. ஆசிரியர் பதவி ஒன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும் முதல் சந்தர்ப்பத்தில் மூன்றாண்டு தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்காக இருக்க வேண்டும். இக்காலப் பகுதியானது ஒருதடவையில் ஓராண்டுக்கானதும் மேலும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாத காலப் பகுதி ஒன்றுக்குமாக பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நீடிக்கப்படலாம்.

ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயது.

22. தமது பதவியில் உறுதி செய்யப்பட்டிருக்கின்ற ஆசிரியர் ஒருவர் அப்பதவியில் அவர் தமது அறுபத்தைந்தாவது வயது வரைக்கும் தொடர்ந்து இருத்தல் வேண்டும். அல்லது அவர் தமது அறுபத்தைந்தாவது வயதை ஒரு கல்வியாண்டின் போது பூர்த்தி செய்தால் அக்கல்வியாண்டின் கடைசிநாள் வரைக்கும் பதவியில் தொடர்ந்து இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்று விட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆசிரியர் எவரும் துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையில் கவனமின்மை காரணமாகப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நடாத்தப்படும் விசாரணை ஒன்று முடிவுறாதிருக்கும்போது வணக்கத்துக்குரிய உபவேந்தரினால் எந்நேரத்திலும் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படலாம் அல்லது அத்தகைய விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் பேரவையினால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றின்மேல் வேலையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவர் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யப்படலாம்.

தகுதிகாண் காலப்பகுதிக்கு பின்னர் உறுதி செய்தல்.

23. ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறு பதவி ஒன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும் முதல் சந்தர்ப்பத்தில் மூன்றாண்டு காலத் தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்காக இருத்தல் வேண்டும் ; அத்துடன் அதன் பின்னர் அத்தகைய நியமனமானது ஆசிரியர் பதவியல்லாத வேறொரு பதவியொன்றிலிருந்து ஆசிரியர் பதவியல்லாத இன்னொரு பதவி உயர்ச்சி ஒன்றுக்காக இருக்கின்றவிடத்துத் தவிர, பேரவையினால் உறுதி செய்யப்படுவதற்கு அமைவாக இருத்தல் வேண்டும் :

ஆயின், பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் பதவி தவிர்ந்த பதவியொன்றுக்கான ஆள் ஒருவரின் நியமனம் உறுதிசெய்யப்பட்டிருந்து பின்னர் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் பதவி தவிர்ந்த இன்னொரு பதவிக்கான பதவி

புயர்ச்சி என்றவாறில்லாமல் வேறு வகையில் நியமிக்கப்படுகின்றவிடத்து, பின்னர் வழங்கப்படும் அவரின் அந்த நியமவமானது, முதலில் ஓராண்டு தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்காக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் பேரவையினால் உறுதி செய்யப் படுதலுக்கு அமைவாக இருத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**20.** பின்வரும் புதிய பிரிவானது, 23 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதெனவபதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தில் 23 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஓய்வுபெறும் வயது முதலியன.

23அ. ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறு பதவி எதனையும் வகிப்பவர் தமது ஐம்பத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும் வரை பதவியில் தொடர்ந்து இருக்கலாம் என்பதுடன் அதன்பின்னர் அவர் பதவியிலிருந்து தன்னிச்சையாகவே ஓய்வுபெற்று விட்டார் எனக்கருதப்படுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பதவி எதனையும் வகிப்பவர், அவரினால் எழுத்தில் விடுக்கப்படும் வேண்டுகோளின்மேல், பல்கலைக்கழகத்தின் பேரவையினால் அவர் தமது அறுபதாவது வயதைப் பூர்த்தி செய்யும்வரை ஒரு தடவையில் ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கான சேவை நீடிப்பு வழங்கப்படலாம் என்பதுடன் அதன்பின்னர் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் எனக் கருதப்படுதலும் வேண்டும்.

ஆயின், மேலும் அத்தகைய பதவி எதனையும் வகிப்பவர், துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையில் கவனமின்மை காரணமாகப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நடத்தப்படும் விசாரணை ஒன்று முடிவுறாதிருக்கும் போது வணக்கத்துக்குரிய துணைவேந்தரினால் எந்நேரத்திலும் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படலாம் அல்லது அத்தகைய விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் மேல் வேலையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவர் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2அ) (அ) உதவித்தொகை செலுத்துநர் ஒருவர் (இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் "நியமத்தர் ஒருவர்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆள் ஒருவரைப் பெயர்

குறித்து நியமிக்கலாம். இவருக்கு, சகாய நிதியத்தில் உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பணங்கள், அத்தகைய உதவு தொகை செலுத்துநர் இறந்ததன்மேல் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ)வின் கீழ் செய்யப்படும் பெயர்குறித்த நியமனம் ஒன்று உதவுதொகை செலுத்துநரின் மரண சாதனத்தில் முரணாக எது எப்படி இருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்;

(இ) பந்தி (அ) வின்கீழ் செய்யப்படும் பெயர்குறித்த நியமனம் ஒன்று உதவுதொகை செலுத்துநர் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் நியமத்தரின் மரணத்தின் மூலம் அல்லது உதவுதொகை செலுத்துநரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் சாட்சி ஒருவரின் முன்னிலையில் உதவுதொகை செலுத்துநரினால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அழித்தலுக்கான அறிவித்தல் மூலம், அல்லது உதவுதொகை செலுத்துநரினால் பின்னர் செய்யப்படும் ஏதேனும் பெயர்குறித்த நியமனம் மூலம் அழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) சகாய நிதியத்தில் உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருக்கும் பணங்களையும் நியமத்தர் தமது ஆளடையாளம் பற்றி பல்கலைக்கழகத்தின் நிதியாளரைத் திருப்திப்படுத்தினாலொழிய, அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் நியமத்தர் எவருக்கும் செலுத்தப்படுதலாகாது; அத்துடன்

(உ) சகாய நிதியத்தில் உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணங்கள் எவற்றையும், அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் மரணத்தின் மேல் அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் நியமத்தருக்குக் கையளிப்பதானது அத்தகைய பணங்கள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் கடப்பாடுகளை பூரணமாக நிறைவேற்றி வைத்தலொன்றாகக் கருதப்படல் வேண்டும்.";அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4) பல்கலைக்கழகத்தின் சேவையில் இருக்கும் போதே உதவுதொகை செலுத்துநர் ஒருவர் மரணிக்கின்றவிடத்து, பல்கலைக்கழகத்தின் நிதியாளர் 30ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, சகாய நிதியத்தில் அவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் முழுத்தொகையையும் அதன் மீதான திரட்டிய

வட்டியுடன் சேர்த்து (2அ) என்னும் உட்பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நியமத்தருக்கு அல்லது நியமத்தர்களுக்கு அல்லது வலிதுடையான பெயர்குறித்த நியமனம் ஒன்று இல்லாவிடத்து, அத்தகைய தொகைக்குச் சட்டமுறையாக உரித்துடைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"சகாயநிதியக் கொடுப்பனவிலிருந்து கழித்தல்.

30. இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படி இருப்பினும் அத்துடன் வேறு ஏதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்கு பங்கமின்றி —

(அ) பல்கலைக்கழகத்தினால் உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருந்த காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் அவரது நேர்மையின்மை அல்லது அசட்டை காரணமாக பல்கலைக்கழகத்துக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பின் அல்லது சேதத்தின் அளவு;

(ஆ) உதவுதொகை செலுத்துநரினால் விடயத்துக்கு ஏற்றவாறு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது அரசாங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஏதேனும் கடன்மீது வருமதியான கொடுப்பனவுகள்; அத்துடன்

(இ) சகாய நிதியத்தில் தமது வரவில் இருக்கின்ற தொகை மீது அத்தகைய வருமதிகள் பொறுப்பொன்றாதல் வேண்டுமென எவ்வேற்பாடுகளின் கீழ் உதவுதொகை செலுத்துநர் உடன்படுகின்றாரோ அவ்வேற்பாடுகளின் கீழ் அவரினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் முறி, உடன்படிக்கை அல்லது வேறு சாதனம் என்பவற்றின் கீழான வருமதிகள்.

சகாய நிதியத்தில் அவ்வுதவுதொகை தருநரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் தொகை மீது முதற் பொறுப்பொன்றாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய தொகை, கொடுப்பனவு மற்றும் வருமதிகள் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவு எதுவும் செய்யப்படும் நேரத்தில் கழிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் VIIஅ அத்துடன் VIIஆ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் VII ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பாகங்கள் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் VIIஅ அத்துடன் VIIஆ என்னும் பாகங்களாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் VIIஅ

பல்கலைக்கழக மாணவர் சங்கமும் வேறு சங்கங்களும்.

மாணவர்கள் சங்கங்கள் முதலியன.

39அ. (1) (i) பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சங்கம் ஒன்று இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழகத்தின் பீடம் ஒவ்வொன்றுக்கும் பீடமாணவர்கள் சங்கம் ஒன்று இருத்தல் வேண்டும்.

(iii) முற்போந்த பந்திகளில் குறிப்பிடு செய்யப்பட்ட சங்கங்களின் பதவிதாங்குநர்களுக்கான தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டிய முறை அத்துடன் அத்தகைய பதவிதாங்குநர்களின் பணிகள் என்பவை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) (i) பேரவை, உயர்கல்விசார் அல்லது சமுகம் சார் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் பிரத்தியேக நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மாணவர்களது சங்கம், கழகம் அல்லது வேறு ஒன்றியம் எதனையும் ஏற்றங்கீகரிக்கலாம். ஆயின் அத்தகைய சங்கத்தின், கழகத்தின் வேறு ஒன்றியத்தின் உறுப்பாண்மையானது பல்கலைக்கழக மாணவர்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்;

(ii) போரவையானது, (i) ஆம் பந்தியின் கீழ் ஏற்றங்கீகரிக்கப்படும் சங்கங்கள், கழகங்கள் அத்துடன் வேறு ஒன்றியங்கள் ஆகியவற்றைப பதிவுசெய்யும் முறை, அவற்றின் பணிகள், அவற்றின் பதவிதாங்குநர்களை நியமிப்பதற்கான தேர்தல்களை நடாத்தும் முறை அத்துடன் அத்தகைய பதவிதாங்குநர்களின் கடமைகள் மற்றும் பணிகள் பற்றி, ஒழுங்குவிதிகள் மூலம் எடுத்துரைக்கலாம்.

(3) போரவையானது, பல்கலைக்கழக மாணவர்கள் சங்கத்துக்கு, பீடமாணவர்கள் சங்கங்களுக்கு (1) ஆம (2) ஆம் உட்பிரிவுளில் குறிபபிடு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஏதேனும் சங்கத்துக்கு, கழகத்துக்கு அல்லது வேறு ஒன்றியத்துக்கு அவற்றின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக அவசியமானதெனப் போவையினால் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் காலத்துக்குக் காலம் குறிதொதுக்கலாம்.

(4) பல்கலைக்கழகத்தின் சங்கம் அல்லது கழகம் அல்லது வேறு ஒன்றியம் எதுவும் பல்கலைக்கழகத்தின் வணக்கத்துக்குரிய துணைவேந்தரின் அபிப்பிராயப்படி பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது பங்கம் ஏற்படுத்தக்கூடிய முறையொன்றில் நடந்துகொண்டால், பல்கலைக்கழகத்தின் சரியான திருவாகத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றவாறு அல்லது நேரான வேறு ஏதேனும் சாதனத்தை மீறிச் செயற்பட்டால் வணக்கத்துக்குரிய துணைவேந்தர் விடயத்துக்கேற்றவாறு அத்தகைய சங்கத்தை, கழகத்தை அல்லது வேறு ஒன்றியத்தை இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது கலைக்கலாம்.

## பாகம் VIIஆ

அமைச்சின் தத்துவங்கள் முதலியன.

39ஆ. (1) அமைச்சரானவர் தனது பொறுப்புக் களைப் பயனுறும் வகையில் நிறை வேற்றுவதை இயலச்செய்வதற்காக நிதி, பல்கலைக்கழகத்தில் இடங்கள் மற்றும் போதனாமொழி போன்ற விடயங்களில் தேசிய கொள்கையைப் பின்பற்றி அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பொதுவான எழுத்திலான பணிப்புகளைப் பேரவைக்குக் காலத்துக்குக்காலம் வழங்கலாம். அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றும் இயலக்கூடியவாறு விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி ஒருவராக இருப்பதற்கு ஆளெவரையும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், அமைச்சரின் அங்கீகாரத்துடன், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அல்லது அத்தகைய அதிகாரியினால் நியமிக்கப்படும் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் அத்தகைய நிலையியற் குழுக்களுக்கு அல்லது அந்நோக்கத்திற்கான குழுக்களுக்கு தமது தத்துவங்களின் எவற்றையும் கையளிக்கலாம்; அத்துடன்

(இ) அவரது பொறுப்புக்களை பயனுறும் வகையில் அவர் நிறைவேற்றுவதை இயலச் செய்யும் நோக்கத்துக்காக அமைச்சர் பல்

கலைக்கழகத்தின் எல்லாச் செயற் பாடுகளும் அல்லது அவற்றில் எவையும் அல்லது நிருவாகம் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி யினால் புலனாய்வு செய்யப்பட்டு அதுபற்றி அறிக்கையிடப்படல் வேண்டும் எனக் கட்டளை ஆக்க லாம்;

(3) பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற நிலைமை யானது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகவிருக்கின்றது என அல்லது தேசியக் கொள் கைக்குத் தீங்குவிளைவிக்கக்கூடியதாக அல்லது பங்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றதென அமைச்சர் திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு அவசி யமானவை என அவர் கருதக்கூடியவாறான அத்த கைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அவர் பேரவையைப் பணிக்கலாம்;

(4) ஏதேனும் வேலைநிறுத்தம் அல்லது கதவடைப் புக் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக பல்கலைக்கழகத்தின் வேலை அல்லது நிருவாகம் பார தூரமாகச் சீர்குலைந்திருக்கின்றதெனவும் அத்துடன் பல்கலைக்கழக அதிகாரிகள் வழமையான நிலைமை களை நிலைநிறுத்தத் தவறிவிட்டார்கள் என அமைச் சர் திருப்திப்படுகின்றவிடத்து, அமைச்சர், பல்கலைக் கழகத்தில் வழமையான நிலைமைகள் நிலைநிறுத்தப் படுவதை உறுதிசெய்வதற்கு அவசியமாகக்கூடியவா றான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க லாம். வழமையான நிலைமைகள் நிலைநிறுத்தப்படாத வரை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பல்கலைக்கழகம் தொடர்பிலான பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றின் எவ்விடயம் தொடர்பிலும் அவசியமானவை என அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா ஏற்பாடுகளை யும் செய்யலாம் :—

(அ) பல்கலைக்கழகத்தை மூடுதல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதான ஏதே னும் சாதனத்தின்கீழ் அத்தகைய வேறு அதி காரிக்கு அல்லது குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப்

பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பல்கலைக்கழகத்தின் எவரேனும் அலுவலருக்கு, அதிகாரிக்கு அல்லது வேறு குழுவுக்குப் பதிலாக தருதிவாய்ந்த அதிகாரி ஒருவராக இருப்பதற்குப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து ஆளெவரையும் நியமித்தல்; அத்துடன்

(இ) மேலே கூறப்பட்டுள்ள எவையேனும் விடயங்களோடு சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட வேறு ஏதேனும் விடயம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளை எதுவும் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய கட்டளை எதுவும் அதன்பின்னர் இயலக்கூடியவாறாக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய அதன்பின்னர் மூன்று மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கு வலுவில் இருத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"துணைவிதிகள், ஒழுங்குவிதிகள் அத்துடன் விதிகள்.

46. (1) (அ) எவ்விடயங்கள் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்விடயங்களுக்காகப் பேரவையினால் துணைவிதிகள் ஆக்கப்படலாம்;

(ஆ) துணைவிதி எதுவும், அத்தகைய துணைவிதியின் வரைவு ஒன்றானது தயாரிக்கப்பட்டு செனேற் சபையினால் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி, கற்பித்தல் அல்லது பரீட்சைகள் சம்பந்தமான அல்லது அவை தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்பில் பேரவையினால் ஆக்கப்படுதலாகாது;

(இ) பேரவையினால் ஆக்கப்படும் துணைவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல்வேண்டும் என்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

(2) எவ்விடயம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ அவ்விடயம் தொடர்பில் விடயத்துக்கேற்றவாறு பல்கலைக்கழகத்தில் பேரவையினால் அல்லது செனேற் சபையினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(3) பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக பல்கலைக் கழகத்தின் அதிகாரசபை அல்லது வேறு குழு எதுவும் விதிகளை ஆக்கலாம் :—

(அ) இச்சட்டத்தின் அல்லது பொருத்தமான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவ் விடயங்கள் விதிகளினால் விதித்துரைக்கப் படவிருக்கின்றனவோ அல்லது விதித்துரைக் கப்படக்கூடுமோ அவ்வெல்லா விடயங்களும்;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது பொருத்தமான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவ் விடயங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டிருக்கின் றனவோ அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டி ருக்கின்றனவோ அவ்வெல்லா விடயங்களும்;

(இ) இச்சட்டத்தினால் அல்லது பொருத்தமான ஏதேனும் சாதனத்தினால் ஏற்பாடுசெய்யப் பட்டிருக்காததும் பிரத்தியேகமாக பல் கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழு சம்பந்தமான மற்ற எல்லாவிடயங்களும்; அத்துடன்

(ஈ) பல்கலைக்கழகத்தின் அதிகாரசபை எதனாலும் அல்லது வேறு குழுவினாலும், எந்நேரத்தி லும் ஆக்கப்படும் விதி எதுவும் அத்தகைய அதிகாரசபையினால் அல்லது வேறு குழுவி னால் ஆக்கப்படும் அதேபோன்ற விதி ஒன் றின் மூலம் திருத்தப்படலாம், அதற்கு எது வும் சேர்க்கப்படலாம், அது வேறுபடுத்தப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்பட லாம்.".

வேந்தருக்கான மாற்றுச் சொல்லமைப்பு.

25. "வேந்தர்" என்னும் சொல்லமைப்பு முதன்மைச் சட்டவாக் கத்தில் காணப்படும் இடங்களில் எல்லாம், அச்சொல்லமைப்புக்குப் பதி லாக "வணக்கத்துக்குரிய வேந்தர்" என்னும் சொல்லமைப்பு இடப் படல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது இத்தால் நீக் கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பொருள்கோடல்.

48. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"ஆசிரியர்" என்பது பேராசிரியர், இணைப் பேராசி ரியர், சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையா ளர், உதவி விரிவுரையாளர், நூலகப் பொறுப் பாளர், பிரதி நூலகப் பொறுப்பாளர்,

சிரேஷ்ட உதவி நூலகப் பொறுப்பாளர் அத்துடன் உதவி நூலகப் பொறுப்பாளர் எனப் பொருள்படும்;

"தோதான சாதனம்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை, துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப் பொருள்படும்; அத்துடன்

"செயலாளர்" என்பது உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் எனப் பொருள் படும்.".

27. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையானது இத்தால் நீக்கப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை நீக்குதல்.

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32 திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட் கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.